# 6 ஆம் வகுப்பு தமிழ் - முதல் பருவம் - இயல் ஒன்று-தமிழ்த்தேன் TNPSC,CCSE,TNUSRB Notes

## இயல் ஒன்று - தமிழ்த்தேன்

## 1.கவிதைப்பேழை - இன்பத்தமிழ்

### சொல்லும் பொருளும்

1. நிருமித்த - உருவாக்கிய
2. விளைவு - விளைச்சல்
3. சமூகம் - மக்கள் குழு
4. அசதி - சோர்வு

### நூல் வெளி :

• பாரதிதாசனின் இயற்பெயர் **சுப்புரத்தினம்.**
• பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.
• தம் கவிதைகளில் **பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு** முதலான புரட்சிகரமான கருத்துகளை உள்வாங்கிப் பாடியுள்ளார்.
• எனவே, இவர் **புரட்சிக்கவி** என்று போற்றப்படுகிறார்.
• இவரைப் **பாவேந்தர்** என்றும் போற்றுவர்.

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

*Answers given at the end of the page. or click on check answer link*

1. ஏற்றத் தாழ்வற்ற ------ அமைய வேண்டும்

a. சமூகம்
b. நாடு
c. வீடு
d. தெரு

Check Answer

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ------ ஆக இருக்கும்

a. மகிழ்ச்சி
b. கோபம்
c. வருத்தம்
d. அசதி

Check Answer

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

a. நிலயென்று
b. நிலவென்று
c. நிலவன்று
d. நிலவுஎன்று

Check Answer

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

a. தமிழங்கள்
b. தமிழெங்கள்
c. தமிழுங்கள்
d. தமிழ்எங்கள்

Check Answer

5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

a. அமுது + தென்று
b. அமுது + என்று
c. அமுது + ஒன்று
d. அமு + தென்று

Check Answer

6. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்ப து

a. செம்மை + பயிர்
b. செம் + பயிர்
c. செமை + பயிர்
d. செம்பு + பயிர்

Check Answer

7. இன்பத்தமிழ் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.
a) விளைவுக்கு - பால்
b) அறிவுக்கு - வேல்
c) இளமைக்கு - நீர்
d) புலவர்க்கு - தோள்

a. 3 4 1 2
b. 1 2 3 4
c. 3 2 1 4
d. 4 2 3 1

Check Answer

## 2.கவிதைப்பேழை - தமிழ்க்கும்மி

### சொல்லும் பொருளும்

1.ஆழிப் பெருக்கு - கடல் கோள்
2.ஊழி – நீண்டதொரு காலப்பகுதி
3.மேதினி - உலகம்
4.உள்ளப்பூட்டு – அறிய விரும்பாமை

### நூல் வெளி :

• பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் **மாணிக்கம்.**
• இவர் **பாவலரேறு** என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.
• **கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம்** முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
(**short tricks** : **நூறு கொய்யா கனி கொத்தா** இருக்கு)
• **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** ஆகிய இதழ்களை நடத்தினார்.
• தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.
• இப்பாடல் **கனிச்சாறு** என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

- இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது.
- இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

8. தாய் மொழியில் படித்தால் ------ அடையலாம்

a. பன்மை
b. மேன்மை
c. பொறுமை
d. சிறுமை

Check Answer

9. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ------ சுருங்கிவிட்டது

a. மேதினி
b. நிலா
c. வானம்
d. காற்று

Check Answer

10. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_____

a. செந் + தமிழ்
b. செம் + தமிழ்
c. சென்மை + தமிழ்
d. செம்மை + தமிழ்

Check Answer

11. பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______

a. பொய் + அகற்றும்
b. பொய் + கற்றும்
c. பொய்ய + கற்றும்
d. பொய் + யகற்றும்

Check Answer

12. பாட்டு + இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது______

a. பாட்டிருக்கும்
b. பாட்டுருக்கும்
c. பாடிருக்கும்
d. பாடியிருக்கும்

Check Answer

13. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது_______

a. எட்டுத்திசை
b. எட்டிதிசை
c. எட்டுதிசை
d. எட்டிஇசை

Check Answer

## 3. உரைநடை உலகம் - வளர்தமிழ்

- 

மனிதரைப் பிற உயிர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது **மொழி .**

உலகில் **ஆறாயிரத்திற்கும்** மேற்பட்ட மொழிகள் உள்ளன.

• **பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார் :**
யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்.

• **மூத்தமொழி :**
தமிழ்த்தாயின் தொன்மையைப் பாரதியார் :
என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்.

• மிகப்பழமையான நூல் - தொல்காப்பியம்

• எளிய மொழி :தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் **வலஞ்சுழி** எழுத்துகளாகவே அமைந்துள்ளன.
(எ.கா.)
வலஞ்சுழி எழுத்துகள் - அ, எ, ஔ, ண, ஞ
இடஞ்சுழி எழுத்துகள் - ட , ய, ழ

•
**சீர்மை மொழி :** சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.
உயர்திணை என்பதன் எதிர்சொல் அஃறிணை என்று பெயரிட்டனர் நம் முன்னோர்.
உயர்திணையின் எதிர்சொல் தாழ்திணை என அமைய வேண்டும்
அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை)
பாகற்காய் (பாகு + அல் + காய்)

• **வளமை மொழி :** பூவின் ஏழுநிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனிப் பெயர்கள் தமிழில் உண்டு.
(அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல்.)

• தொல்காப்பியம், நனனூல் - இலக்கண நூல்கள்.
• எட்டுத்தொகை, பத்துப்பாட்டு - சங்க இலக்கியங்கள்;
• திருக்குறள், நாலடியார் - அறநூல்கள்.
• சிலப்பதிகாரம், மணிமேகலை - காப்பியங்கள்.

• 'மா' – மரம், விலஙகு,பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு

• **வளர் மொழி :** முத்தமிழ் - இயல்தமிழ் ,இசைத்தமிழ், நாடகத்தமிழ்
இயல்தமிழ் - எண்ணத்தை வெளிப்படுத்தும்
இசைத்தமிழ் - உள்ளத்தை மகிழ்விக்கும்
நாடகத்தமிழ் - உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்
• தமிழ்க் கவிதை வடிவங்கள் : துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செயயுள்.
• உரைநடை வடிவங்கள் : கட்டுரை, புதினம், சிறுகதை.

• **புதுமை மொழி :** புதியகலைச்சொற்கள் - இணையம் ,முகநூல் ,புலனம் ,குரல் தேடல் ,தேடு பொறி,செயலி,தொடுதிரை.
மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எண்கள் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்
• தொல்காப்பியம், நன்னூல் - கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்றுள்ளன.

## இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் சில தமிழ்ச்சொற்கள்.

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

14. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள்_______

a. புதுமை
b. பழமை
c. பெருமை
d. சீர்மை

Check Answer

15. 'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_____

a. இடன் + புறம்
b. இடது + புறம்
c. இட + புறம்
d. இடப் + புறம்

Check Answer

16. 'சீரிளமை' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_______

a. சீர் + இளமை
b. சீர்மை + இளமை
c. சீரி + இளமை
d. சீற் + இள

Check Answer

17. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

a. சிலம்பதிகாரம்
b. சிலப்பதிகாரம்
c. சிலம்புதிகாரம்
d. சில பதிகாரம்

Check Answer

18. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______

a. கணினிதமிழ்
b. கணினித்தமிழ்
c. கணிணிதமிழ்
d. கனினிதமிழ்

Check Answer

19. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ______

a. கண்ணதாசன்
b. பாரதியார்
c. பாரதிதாசன்
d. வாணிதாசன்

Check Answer

20. மா என்னும் சொல்லின் பொருள்______

a. மாடம்
b. வானம்
c. விலங்கு

d. அம்மா

Check Answer

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது **மொழி**
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் **தொல்காப்பியம்**
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது **எண்கள்** அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

## 4. விரிவானம் - கனவு பலித்தது (கடிதம்)

**சதிஷ்தவான்** (1972ம் ஆண்டைய இந்திய விண்வெளி ஆய்வு மையத்தலைவர்) ஆய்வு மையம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ளது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் தமது **தொல்காப்பியம்** என்னும் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியவர் - **தொல்காப்பியர்**

கடல் நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும் - என அறிவியல் செய்திகளை குறிப்பிடும் நூல்கள் - **முல்லைப்பாட்டு, பரிபாடல் ,திருக்குறள், கார் நாற்பது, திருப்பாவை**
(**Short Tricks** : **முல்லை பரி**த்து **குற(ள்)**வன் **கார்**ஏறிச்சென்று **பாவை**க்கு கொடுத்தான் .)

"ஆழ அமுக்கி முக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி" - இப்பாடலை இயற்றியவர் - **ஔவையார்**

வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தியை **பதிற்றுப்பத்து** என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

சுறா மீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தியை **நற்றிணை** என்னும் நூல் குறிப்பிடுகிறது.

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என நிரூபித்த அறிஞர் - **கலிலியோ கலிலி** .இக்கருத்து **திருவள்ளுவமாலை** என்னும் நூலில் **கபிலர்** எழுதிய பாடலில் இடம்பெற்றுள்ளது.

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் " - என ஐம்பூதங்களை பற்றி குறிப்பிடும் நூல் - **தொல்காப்பியம்**

"கடல்நீர் முகுந்த கமஞ்சூழ் எழிலி" - எனும் பாடல் இடம் பெற்ற நூல் - **கார் நாற்பது**
"நெடு வெள்ஊசி நெடு வசி பரந்த வடு" - எனும் பாடல் இடம் பெற்ற நூல் - **பதிற்றுப்பத்து**
(**Short Tricks** : **புண்ணுக்கு பத்து** போடனும்)

"எறிந்தெனச் சுருங்கிய
நரம்பின் முடிமுதிர் பரதவர்" - எனும் பாடல் இடம் பெற்ற நூல் - **நற்றினை**

"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும்" - என்ற பாடலை இயற்றியவர் - **கபிலர்**

## தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள் :

மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு - அப்துல் கலாம்
இஸ்ரோ அறிவியல் அறிஞர் - மயில்சாமி அண்ணாதுரை
இஸ்ரோவின் தலைவர் - சிவன்

## 5. கற்கண்டு - தமிழ் எழுத்துகளின் வகை தொகை

தமிழ் மொழியின் இலக்கண வகைகள் - 5

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்

ஒலி வடிவாக எழுதப்படுவதும் வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படும்.

வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள **பன்னிரண்டு உயிர் எழுத்துகளும்** பிறக்கின்றன.

அ, இ, உ, எ, ஒ - ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன. (குறில் எழுத்துகள்)
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன. (வநடில் எழுத்துகள்.)

மாத்திரை என்பதன் பொருள் - கால அளவு

குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 1 மாத்திரை
நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 2 மாத்திரை

மெய் என்பதன் பொருள் - உடம்பு
மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு - அரை மாத்திரை

ஆயுத எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு - அரை மாத்திரை

மெய் எழுத்துக்கள் பன்னிரண்டும் வல்லினம் , மெல்லினம், இடையினம் என பிரிக்கப்படுகிறது.

வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

'கபிலர்' என்னும் சொல்லின் மாத்திரை அளவு - 3 1/2 மாத்திரை

.உயிர்மெய் எழுத்துகளை **உயிர்மெய்க் குறில்,உயிர்மெய் நெடில்** என இரு வகைப்படுத்தலாம்.

பழமொழியின் சிறப்பு சுருங்கச் சொல்வது
நோயற்ற வாழ்வைத் தருவது சுத்தம்
உடல் ஆரோக்கியமே உழைப்புக்கு அடிப்படை.

வலஞ்சுழி - Clock Wise
இடஞ்சுழி - Anti Clock Wise
இணையம் - internet

Search Engine - தேடுபொறி

Voice Search - குரல்தேடல்
Touch Screen - தொடுதிரை

## Answers

1. சமூகம்
2. அசதி
3. நிலவென்று
4. தமிழெங்கள்
5. அமுது + என்று
6. செம்மை + பயிர்
7. 3 4 1 2
8. மேன்மை
9. மேதினி
10. செம்மை + தமிழ்
11. பொய் + அகற்றும்
12. பாட்டிருக்கும்
13. எட்டுத்திசை
14. பழமை
15. இடது + புறம்
16. சீர்மை + இளமை
17. சிலப்பதிகாரம்
18. கணினித்தமிழ்
19. பாரதியார்
20. விலங்கு